# புத்தளம் பிரதேச சபை
# புத்தளம் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 13 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 07 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, புத்தளம் பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தளம் பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

திண்மக் கழிவுப் பொருட்கள் செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட 05 கட்டிடங்களின் பெறுமதியான ரூபா 5,070,362 தொகையும் கந்தகுளிய முன்பள்ளிக் கட்டிடத்தின் பெறுமதியான ரூபா 319,879 தொகையும் அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 72,675 பெறுமதியான புத்தக இருப்பும் நிலையான சொத்துக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 98,394,287 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டெழும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,892,876 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,433,342 ஆக இருந்தது.

### 2.2 நிதிக்கட்டுப்பாடு

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,200,319 தொகையானதுடன் அவ் விடயங்களுக்கு உரித்தாகப் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,014,486 தொகையானமையால் ரூபா 1,406,455 தொகையான வேறுபாடு கணக்குகளில் காணக்கூடியதாக இருந்தது.

(ஆ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையால் செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 29,059,440 ஆக இருந்ததுடன் அதில் ஒரு வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,191,281 ஆக இருந்தது.

(இ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 8,731,252 தொகையானதுடன் 01 வருடத்திகாலத்திற்கு மேலான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,954,786 ஆகக் காணப்பட்டது.

(ஈ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ஊழியர் கடன் மீதி ரூபா 1,850,923 தொகையானதுடன் சேவையை விட்டு விலகிய, இடமாற்றலாகிச் சென்ற, இறந்த மற்றும் ஓய்வு பெற்ற 14 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 45,844 தொகையான கடன் மீதி பல வருட காலமாக அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்டது.

(உ) 2004 ஆம் ஆண்டு முதல் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அசைவற்றுக் காணப்படும் பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 691,906 ஆகக் காணப்பட்டது.

(ஊ) பின்வரும் வரித் தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படாது கையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

| | | **ரூபா** |
|---|---|---|
| (i) | பெறுமதி சேர் வரி | 1,912,830 |

(ii) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 33,971

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,077 | 1,146 | -- |
| (ii) | வாடகை | 3,737 | 5,803 | -- |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,311 | 2,311 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 36,753 | 34,671 | 2,082 |

**2.3.2 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதி மன்றத் தண்டப் பணம் | 5,000,000 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 22,419,258 |

## 2.4 விளைவற்ற மற்றும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்

ரூபா 830,555 பெறுமதியான 14 மோட்டார் வாகன உபகரணங்கள் பல வருட காலமாக விளைவற்றும் குறைவான பயன்பாடுடையதுமாகக் காணப்பட்டன.

## 2.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2012 உலக சிறுவர் தின விழாவிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 467,000 தொகையான செலவின மதிப்பீட்டில் ரூபா 200,000 வரை சபை நிதியத்தால் ஏற்கப்படுவதற்கும் எஞ்சிய தொகை அனுசரணையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுவதற்கும் உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கு மாறாக அவ்வெல்லை மீறப்பட்டு ரூபா 186,745 தொகை எவ்வித அங்கீகாரமும் இன்றி சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) வாகனக் கட்டுப்பாடு